# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை

### யாழ்ப்பாணம் கலாசார நிலையத்துக்கு "திருவள்ளுவர் கலாசார மையம்" எனப் பெயர் சூட்டப்பட்டது

2025 ஜனவரி 18 ஆம் திகதி நடைபெற்றிருந்த நிகழ்வொன்றில் உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் புத்த சாசன, மத விவகாரங்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கௌரவ ஹினிதும சுனில் செனவி ஆகியோர் இணைந்து, யாழ்ப்பாணம் கலாசார நிலையத்துக்கு "திருவள்ளுவர் கலாசார மையம்" எனப் பெயர் சூட்டப்பட்டதாக அறிவித்தனர். சிறந்த தமிழ் கவிஞரும் தத்துவஞானியுமான திருவள்ளுவரை நினைவுகூர்ந்து கௌரவிக்கும் முகமாக திருவள்ளுவர் கலாசார மையம் எனப் பெயர் சூட்டப்பட்டது. மீன்பிடி, நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் கௌரவ இராமலிங்கம் சந்திரசேகர், வட மாகாண ஆளுநர் கௌரவ நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் திரு எஸ்.கிருஷ்ணேந்திரன், புத்த சாசன, மத விவகார மர்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு அத்தப்பத்து, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கொன்சூல் ஜெனரல் திரு சாய் முரளி, மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏனைய பிரமுகர்கள் & கலைஞர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

2. 12 மில்லியன் அமெரிக்க டொலர் இந்திய நன்கொடை உதவியின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட இந்த கலாசார நிலையமானது வட மாகாண மக்களின் செழுமைமிகு பாரம்பரியங்கள், கலைகள், மற்றும் அபிலாஷைகள் செழித்தோங்குவதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றது. தனித்துவமிக்க சின்னமாக திகழும் இக்கலாசார மையம் அதி நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளதுடன் இரு தளங்களிலான நூதனசாலை, 600க்கும் அதிகமானோர் அமரக்கூடிய வசதிகளுடனான தியேட்டர் வகையிலான கேட்போர் கூடம், 11 மாடிகளைக் கொண்ட கற்றல் நிலையம், திறந்த அரங்கமாக பயன்படுத்தக்கூடிய ஒரு பொதுச் சதுக்கம் உள்ளிட்ட வசதிகளை கொண்டுள்ளது.

3. யாழ்ப்பாணத்துக்கு வரலாற்று முக்கியத்துவமிக்க விஜயத்தினை மேற்கொண்டிருந்த இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களால் 2015 ஆம் ஆண்டு மார்ச்சில் இக்கலாசார மையத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2022 ஆம் ஆண்டு மார்ச் ,மாதம் இக்கலாசார நிலையம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டு 2023 பெப்ரவரியில் இலங்கை மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

4. ஜனவரி 18 ஆம் திகதி நடைபெற்ற குறித்த பெயர் சூட்டும் இந்நிகழ்வில் உரை நிகழ்த்தியிருந்த உயர் ஸ்தானிகர், கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள், மேன்மைமிக்க திருவள்ளுவர் அவர்களுக்கு மரியாதை செலுத்துவதனை மட்டும் நோக்கமாக கொள்ளாமல் இந்தியாவுக்கும் இலங்கைக்கும்

இடையிலான தனித்துவமானதும் பிரிக்கமுடியாததுமான பிணைப்பு, பொதுவான கலாசாரம் மற்றும் பொதுவான வரலாறு ஆகியவற்றினைக் கொண்டாடும் வகையிலும் இம்முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டதெனவும் குறிப்பிட்டார். கலாசாரம், ஒத்துழைப்பு, மற்றும் பொதுவான சுபீட்சம் ஆகியவற்றில் செழிப்பான எதிர்காலம் ஒன்றை நோக்கி திருவள்ளுவரின் ஞானத்துடன் வழிநடத்தப்படும் பயணமொன்றின் ஆரம்பத்தை இத்தருணம் குறித்து நிற்கின்றதென உயர் ஸ்தானிகர் குறிப்பிட்டார். அத்துடன் இதனை திருவள்ளுவரது போதனைகள் வாழும் இடமாகவும், அப்போதனைகளின் உயிரோட்டமுள்ள உருவகமாகவும் யாழ்ப்பாணம் மற்றும் வட மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் மாற்றவேண்டுமெனவும் உயர் ஸ்தானிகர் வலியுறுத்தினார்.

5. இதேவேளை இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த புத்தசாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கௌரவ ஹினிதும சுனில் செனவி அவர்கள் யாழ்ப்பாணம் கலாசார நிலையத்துக்கு மிகவும் பொருத்தமான பெயர் சூட்டப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார். மேலும், நமது செயல்கள் எப்போதும் கருணை மற்றும் நேர்மையினை அடியொற்றியிருக்க வேண்டும் என்பதை திருவள்ளுவரது போதனைகள் ஞாபகமூட்டுகின்றதென குறிப்பிட்ட அவர், திருவள்ளுவரது தலைசிறந்த படைப்பான திருக்குறள், நீதியான மற்றும் நல்லிணக்கமான சமூகத்தை நோக்கி நம்மை வழிநடத்துகிறது என்றும் தெரிவித்தார். இத்தருணத்தின் ஒரு சிறப்பான வெளிப்பாடாக, கௌரவ அமைச்சர் அவர்களால் இந்திய உயர் ஸ்தானிகருக்கு சிங்கள மொழியில் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் பதிப்பு பரிசளிக்கப்பட்டிருந்தது.

6. இந்த கலாசார மையத்தை பரிசளித்தமைக்காக இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க அவர்கள் சார்பாக, கௌரவ அமைச்சர் அவர்கள், இந்திய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்தார், மேலும், அதை உத்வேகமிக்க கலாசார நடவடிக்கைகளின் மையமாக மாற்றுவதில் அனைத்து தரப்பினருடனும் இணைந்து பணியாற்ற ஆவலுடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

**************

**18 ஜனவரி 2025**
**கொழும்பு**